88 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு தில்லைநாதன்
PHYSICAL CHEMISTRY
(அவத்தைச் சமநிலை)
ஆரம்பம்: 05-03-88
Sat. 07.15 - 08.15
New Master
INSTITUTE
241, Navalar Road,
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

89 A/L
CHEMISTRY
ஆசிரியர்: திரு.தில்லைநாதன்
(Sat, Sun)
9 03 - 10 30
அசேதன இரசாயனம்
12 30 - பிணைப்புகள்
ஆரம்பம்:
05-03-1988 Sat.
New Master
Institute
B.M.C LANE, JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ மாசி மீ 26 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 19 (09 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:23

### சிறுபான்மை இனங்களைச் சமமாக ஏற்காவிடில்

# நாடு பிளவுறுவதை தடுக்க முடியாது!

## சிங்கள மக்களை எச்சரிக்கிறார் மாவட்ட அமைச்சர் மன்சூர்

— உதயன் அம்பாறை மாவட்டச் செய்தியாளர் —

அம்பாறை மார்ச் 9

சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களையும், முஸ்லிம்களையும் தங்களுக்குச் சமமானவர்களாகச் சிங்கள மக்களும், அவர்களின் தலைவர்களும் ஏற்கவேண்டும்.

இந்த உண்மையை அவர்கள் இனியும் ஏற்று நடக்க மறுத்தால், இந்த நாடு பிளவுபடுவதை எவராலும் தடுக்க முடியாமற்போகும்.

இவ்வாறு எச்சரித்தார் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனை எம். பி.யுமான ஜனாப் ஏ. ஆர் மன்சூர்.

கல்முனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர்களுக்கான 'போனஸ்' வழங்கும் விழா அண்மையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை பிரஜைகள் குழு உபதலைவரும் சங்க இயக்குநர் மன்றத் தலைவருமான ஜனாப் எம். எம். இஸ்மயில் தலைமையில் விழா நடைபெற்றது.

மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர்கள் உரிமையுடனும் சமத்துவத்துடனும் வாழ வேண்டும்.

அன்றேல் நாட்டு மக்கள் அனைவரும் நிம்மதியுடன் வாழ முடியாது. எனவே பெரும்பான்மை இனத்தவர்கள், சிறுபான்மையினரை மதித்து நடக்க முன்வர வேண்டும்.

இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகம் மிளிர வேண்டுமானால், சிங்கள மக்களும் அவர்களது தலைவர்களும் இங்கு வாழும் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களும், முஸ்லிம்களும் தமக்குச் சமமானவர்கள் என்பதையும், சமமான உரித்துடையவர்கள் என்பதையும் ஏற்க வேண்டும்.

இந்த உண்மையை அவர்கள் ஏற்காவிட்டால் நாடு இரண்டாகப்பிளவுறுவதை எவராலும் தடுக்க முடியாமற்போகும்.

1983 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட அமைதியின்மை நீங்கவேண்டும். உண்மைகளை உணர்ந்து செயற்பட வேண்டும்.

— இவ்வாறு மாவட்ட அமைச்சர் தெரிவித்தார். (அ-14)

### இன்று ஜீ சீ.ஈ முடிவுகள்

ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகின்றன. பரீட்சை ஆணையாளர் ஸ்டெர்லிங் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு பரீட்சை முடிவுகள் இன்றே கிடைக்கும்.

ஏனைய பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். (ஒ-எ)

### பழைய இடங்களில் 'சென்றி'கள்

யாழ் நகரின் முக்கிய சந்திகளில் தற்போழுது இந்திய அமைதிப் படையினர் "சென்றி" களை அமைத்து வருகின்றனர்.

முன்னர் 'சென்றிகள்' இருந்து அகற்றப்பட்ட இடங்களிலும் மீண்டும் சென்றிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (ஒ-10)

### சுபநேரம்

09 - 03 - 1988
மாசி 26
புதன் கிழமை
சுபநேரம்: 4-54 முதல் 6-24 வரை
ராகுகாலம்: 12.24 முதல் 1-54 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### பஸ்சேவைகள் வழமைநிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 9

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் வழமைபோல் நடைபெற்று வருகின்றன.

யாழ் - நகரில் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டிருந்தாலும் பஸ் சேவைகள் எம்மால் இயன்றவரை நடத்தப்படும் என வட பிராந்திய போக்குவரத்து சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தனியார் மினிபஸ் சேவைகளும் வழமைபோல் நடைபெறுகின்றன. (ஒ-10)

### மாகாணசபைத் தேர்தல்

## இ. தொ. காவும் ஐ. தே. கவும் இழுபறி

கொழும்பு, மார்ச் 9

நடைபெறவுள்ள நான்கு மாகாண சபைத் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதா? அல்லது ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதா?

இதுபற்றி இ.தொ.காங்கிரஸுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூன்று கோரிக்கைகளை ஐ. தே. க. விடம் முன் வைத்துள்ளது.

அவற்றுக்கு ஆளும் கட்சி தெரிவிக்கும் பதிலைப் பொறுத்தே இ. தொ. கா தேர்தலில் போட்டியிடுவது குறித்து முடிவு செய்யும் எனத் தெரிகின்றது. இன்று நியமனப் பத்திரங்களை ஏற்பதற்கான கடைசிநாளாகும்.

இ. தொ. கா முன் வைத்துள்ள மூன்று கோரிக்கைகளும் வருமாறு:

★ நாடற்றவர்கள் அனைவரும் தேர்தலில் கலந்து கொள்ளும் வகையில் பிரசா உரிமை வழங்கப்பட்டு வாக்குரிமையும் வழங்கப்பட வேண்டும்.

★ இந்திய மக்களின் ஏகபிரதிநிதி இ. தொ. கா. என்று உறுதிப் படுத்தப்பட வேண்டும்

★ மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் தெரிவு, இ. தொ. கா வுடன் கலந்தாலோசித்தே முடிவு செய்யப் பட வேண்டும். (இ-எ)

### திருமலையில் உண்ணாவிரதம்

திருகோணமலை, மார்ச்9

திருமலை அன்னையர் முன்னணியினர் இன்று முதல் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் குதிக்க உள்ளனர்.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினரின் சாகும்வரை உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்து — தமிழ்ப் பகுதிகளில் அமைதி ஏற்படவும் வேண்டியே இவர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க உள்ளனர். (ஒ)

### ● இவர்கள் ராஜினாமா

கொழும்பு மார்ச் 9

இரண்டுபிரதி அமைச்சர்களும் ஒரு மாவட்ட அமைச்சரும் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்டனர்.

மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக இவர்கள் ராஜினாமாச் செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதி அமைச்சர்கள் பஞ்சிநிலமே, பேர்ஸி சமவீர, மாவட்ட அமைச்சர் ஜெ. விரம பெரேரா ஆகியோரே ராஜினாமாச் செய்தவர்கள் ஆவர். (ஒ-எ)

### தபாற் பெட்டிகள் திருத்தம்

யாழ்ப்பாணம். மார்ச் 9

யாழ் மாவட்டத்தில் கடந்த வருடம் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது சேதமாக்கப்பட்ட தபால் பெட்டிகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ 10)

# நிவாரண விண்ணப்பங்கள் ஏற்பது இடைநிறுத்தம்

### அகதிகள்புனர்வாழ்வு நிதியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 9

அண்மைக்கால அசம்பாவிதங்களில் வீடுகளை இழந்து பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

தற்பொழுது நிதியத்துக்கு இரண்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்து குவிந்துள்ளன.

இவற்றைப் பரிசீலிக்கும் வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் இவை பரிசீலிக்கப்பட்டு இவற்றுக்கான நிதி வழங்கப்பட்ட பின்னரே மேற்கொண்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்காக மேலதிகமான வெளிக்கள உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் வேலை பூர்த்தி அடைந்த பின்னரே மீண்டும் கூடுதலான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு துரித கதியில் நிவாரணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காயமுற்றவர்களுக்கும், சிறைத் தடுப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்குமான நிவாரண விண்ணப்பங்கள் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதாகவும்— தகுந்த ஆதாரங்களுடன் வரும் பட்சத்தில் மேற்படி உதவிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்படுகிறது (ஒ-9)

### கிரிக்கெட்: சென்ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ் சென் பற்றிக்ஸ்- சென் ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் சென் ஜோன்ஸ் அணி 10 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

சென் பற்றிக்ஸ் தனது முதலாவது இன்னிங்ஸில் மொத்தம் 50 ஓட்டங்களையும் சென் ஜோன்ஸ் அணி 95 ஓட்டங்களையும் பெற்றிருந்தன

சென் பற்றிக்ஸ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 62 ஓட்டங்களையும் சென் ஜோன்ஸ் அணி விக்கெட் இழப்பின்றி 20 ஓட்டங்களையும் பெற்றன. (ஒ-7)

# ஜனாதிபதிக்கு எதிராக

## அனுரா வழக்குத் தொடருவாராம்

### ரூ. 10 கோடி மான நஷ்டம் கோரி

கொழும்பு, மார்ச் 9

பத்துக் கோடி ரூபா மானநஷ்டம் கோரி ஜனாதிபதி ஜெயவர்த்தன மீது வழக்குத் தாக்கல் செய்ய எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தீர்மானித்து இருக்கின்றார்.

இது சம்பந்தமான பூர்வாங்க வேலைகளில் தனது சட்டத்தரணிகள் ஈடுபட்டுள்ளனர் என்று திரு. அனுரா பண்டாரநாயக்கா கொழும்புச் செய்தியாளரிடம் தெரிவித்திருக்கின்றார்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி ஜெயவர்த்தன விடுத்த சவாலை தான் ஏற்பதாகவும் திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கின்றார்.

சவாலை ஏற்கும் கடிதம் அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் திரு. ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

திரு. ஜெயவர்த்தனவுக்குக் கடந்த வாரம் திரு. அனுரா பண்டாரநாயக்கா கடிதம் ஒன்று எழுதி இருந்தார்.

தனக்கு எதிராக திரு. ஜெயவர்த்தன கூறியதாகக் கூறப்படும் குற்றச் சாட்டுக்கள் பற்றி திரு அனுரா பண்டாரநாயக்கா அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த சனிக்கிழமை திரு. ஜெயவர்த்தன ஐ. தே. க. காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் அனுரா வின் கடிதம் பற்றி பிரஸ்தாபித்து இருந்தார்.

அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள விசேட உரிமையை விலக்கி நீதிமன்றத்தில் திரு அனுரா பண்டாரநாயக்காவைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக திரு. ஜெயவர்த்தன அப்போது கூறியிருந்தார்.

திரு. அனுரா பண்டாரநாயக்கா அப்போது தான் எழுப்பும் சில கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாரா? — என்றும் திரு ஜெயவர்த்தன அப்போது கேட்டிருந்தார்.

அதற்குத் தயார் என்று அனுரா பதிலளித்திருக்கிறார்.

" நீதிமன்றத்தில் நானும் சில கேள்விகளை ஜனாதிபதியிடம் கேட்பேன். அதற்கும் அவர் தயாராக இருக்க வேண்டும் " — இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா கூறினார். (இ-எ)

முச்சந்தி முரளி



வாயால் வெல்லமுடியாததை வழக்கால வெல்லும யோசனையோ இரண்டு பேருக்கும்...!

### கம்யூனிஸ்ட் பிரமுகர்

# விஜயானந்தன் நேற்று சுட்டுக் கொலை!

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச செயலாளரான திரு.எஸ் விஜயானந்தன் நேற்றுக் காலை இனந் தெரியாதவர்களால் சுடப்பட்டு மரணமானார்.

பிரபல தொழிற்சங்கவாதியும், இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்க யாழ் கிளையின் பிரமுகருமான எஸ். விஜயானந்தன் சுந்தரோடையில் உள்ள அவரது வீட்டில் வைத்துச் சுடப்பட்டார்.

செய்தி பரவியதும், இந்திய அமைதிப் படையினர் சுந்தரோடை, சுன்னாகம் பகுதிகளில் தீவிர தேடுதல் நடத்தினர்.

சுன்னாகம், சுந்தரோடைப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

யாழ்-காங்கேசன்துறை வீதியிலும் சுந்தரோடை-அம்பனை வீதியிலும் பல இடங்களில் வாகனங்கள் மறிக்கப்பட்டு, சோதனைகள் இடம்பெற்றன.

இதனால் உடுவில், சுந்தரோடை, சுன்னாகம் பகுதிகளில் பதற்றநிலை காணப்பட்டது. (இ-)

# ஜே வி.பி.மீதானதடையை நீக்கக் கோருகின்றார் அனுரா

கொழும்பு, மார்ச் 9

நாட்டில் உள்ள ஒரே ஒரு இடதுசாரிக் கட்சி ஜே. வி .பி. யே அதன் மீதான தடையை அரசு நீக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுக்களை நடத்த முன்வரும் இலங்கை அரசு ஏன் ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீராவுடன் பேச்சுக்களை நடத்த முன்வரக் கூடாது?

எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்க ஹோமகமவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

திரு அனுரா பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:

அன்னையின் சேலைத் தலைப்பை முன்னர் பிடித்துத் தொங்கிய இடதுசாரியினர் இப்போது மகளின் சேலைத் தலைப்பைப் பிடித்துத் தொங்குகின்றனர்

விஜேயவின் கொலைக்கு நான் தான் காரணம் என்று வதந்திகளைபரப்பி விட்டனர். விஜேயவின் மரணம் குறித்து நான் மிகவும் கவலைப்படுகின்றேன்.

இன்று சந்திரிகாவும் இரண்டு குழந்தைகளும் ஹொரகொல்லையிலதான தங்கி இருக்கின்றனர்.

அரசியல் சித்தாந்தம் வேறுபட்டாலும் அம்மா மகள் உறவில் வேறுபாடு இல்லை.

பயங்கரவாதத்தை சுதந்திரக் கட்சியும் முற்றாக வெறுக்கின்றது. குண்டு மூலம் பதவிக்கு வருவதை எமது கட்சி விரும்பவில்லை.

ஹோமகம ஆசனம் ஒருதடும்பத்திற்குஉரியது அல்ல. எமது கட்சி ஹோமகமவில் வெற்றியீட்டும் என்பதை அறிந்தே அரசு இடைத் தேர்தலை ஒத்திவைத்தது.

சுதந்திர கட்சியினரையும் பயங்கரவாதிகளாக்குவதற்காகவே ஹோமகம இடைத் தேர்தலை அரசாங்கம் உடனே நடத்தவேண்டும்.

திரு.ஜே.ஆர்.நானும் றோயல் கல்லூரியிலதான் படித்தோம் பல நல்ல பாடங்களை ஜே ஆர் படிக்கவில்லை. தேர்வில் தோல்வியை கண்டோடக்கூடாது என்றுதான் படித்தேன்-

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ)

# யாழ் தபாலகத்தில் 'மணி ஓடர்' மாற்றலாம்

யாழ் பெரிய தபால் கந்தோரில் காசுக்கட்டளைகள், தபாற்கட்டளைகளை மாற்றும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதே வேளை 50 ரூபா பெறுமதியான முத்திரைகளும் அதற்குட்பட்ட முத்திரைகளும் தற்பொழுது யாழ் தபால் கந்தோரில் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றன. (ஒ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### விற்பனைக்கு

Hi-ex, Hy-Line, Golden Comet பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 11 ஆம் திகதி வெள்ளி கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (1858)

ஒரு நாள் வைறலைன் கோழிக்குஞ்சுகள் 15 ம் திகதி விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். தொடர்பு கொள்க. சிமாட்டி பாம்ஸ், மைலன காடு, சுன்னாகம். (18:9)

### தேவை

சைவ உணவகத்திற்கு சர்வர், மேற்பார்வையாளர் தேவை. தொடர்பு கொள்க 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1835)

றேடியோ, ரிவி திருத்துவதில் அனுபவம் உள்ளவர் தேவை. தொடர்பு கொள்க 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1835)

ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பு டைவ்விங் தேவை. நேரில் சமூகமளிக்கவும். டில்கா வோச் வேர்க்ஸ். (பஸ் நிலையம் முன்பாக மேல் மாடி) யாழ்ப்பாணம். (1857)

எமது ஸ்தாபனத்திற்கு உதவி சமையல்காரரும் உதவியாளரும் உடன் தேவை. (Assistant Cook, and Helper) ஸ்ரான்லி சைனீஸ் றெஸ்ரோறன்ற் இல 60, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1871)

எமது மருத்துவமனைக்கு அனுபவமுள்ள வைத்தியத் தாதிகள் (பெண்கள்) தேவை. சுய விவர அறிக்கையுடன் நேரில் தொடர்பு கொள்ளவும் வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை, இல. 17, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (1863)

யாழ் நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு கீழ் குறிப்பிடும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன தகைமைகளுடன் முன் அனுபவம் உடையோர், உடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- விளம்பர இல-80, மே/பா உதயன் நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

1. கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) 2. விற்பனைப்பிரதிநிதி (Sales Rep) 3. இரவு நேரகாவலாளி (Night Watcher) (1634)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39 / 17, Power House Road, 3rd Lane, Jaffna (1803)

### உணவு

Wel comes you to Hotel de Galaxy (Unavagam) (கலக்ஸி உணவகம்) நகரின் மத்தியில் சுவையான மதிய, இரவு உணவு வகைகளை அருந்த நாடுங்கள்—Galaxy No.30 கன்னாதிட்டிரோட் (சிவன்கோயிலமுன்பாக) யாழ்ப்பாணம். We Look after you Better.

### போட்டோ ஸ்ரட்

'கிளின்-கட்' யாழ் நகரின் முன்னணிநிறுவனம். உங்களின் போட்டோ ஸ்ரட் பிரதிகளுக்கு; கிளின்-கட் இல:- 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### புத்தகம்

சுலபமாக ஆங்கிலம் பேசுவதற்கு Spoken English 40/- தமிழ் மூலம் சிங்களம் படிக்க நல்லதோர் புத்தகம் 20/- மலிவு விலையில் எண்ஜே இடம், ''வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமரலாஜி 6/50, பூபால சிங்கப் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1603)

### காணவில்லை

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கனகரத்தினம் திருச்செல்வம் ஆகிய எனது சுடவுச் சீட்டும் அடையாள அட்டையும் நல்லூர் முத்திரைச் சந்தையில் உள்ள சின்ன ராசாவின் கடையின் முன்பாக தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மின்சார நிலைய வீதியில் உள்ள ''உதயன்'' காரியலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (1868)

### VACANCY

Wanted urgently a Female Accounts Clerk / Book - Keeper with 3 years experience and able to Handle Accounts Independently in English Salary negotiable Brite Soap Industries, K. K. S Road Mallakam. (1841)

---

## AITKEN SPENCE INSURANCE (PTE) Ltd.

தற்போது பழைய முகவரியாகிய இல. 192/1, ஆஸ்பத்திரி வீதியில் மீண்டும் இயங்குகின்றது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

விரைவில் Union Assurance Ltd. ஸ்தாபனத்தாருக்கு காப்புறுதி வழங்குவோம். (1866)

---

## Diploma in Nursing

## தாதிப்பயிற்சி நெறி

15-03-1988 இல்

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

1. Nures-Aid Associarion of Sri Lanka வினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்.
2. எமது நிறுவனத்தில் தாதிப் பயிற்சியை முடித்துக் கொள்ளும் மாணவிகளுக்கு சிங்கப்பூர் வைத்தியசாலைகளில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
3. தூர இட மாணவிகளுக்குப் பாதுகாப்பான விடுதி வசதிகள் உண்டு

விவரங்களுக்கு:-

★ சாயி ★

மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்நகர். (1883)

---

புதிய தெளிவான திரைப்படங்கள்
வாடகைக்குப் பெறவும்
புதிய பழைய பாடல்கள்
பதிவு செய்வதற்கும்
சிறந்த இடம்

## பாரத்

## வீடியோ சென்ரர்

51/1, கன்னாதிட்டி வீதி,
(மக்கள் வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

● ரேடியோ, T. V. பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

---

# பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★ குவைத்
★ பஹ்ரின் ★ அபுதாபி
★ சிங்கப்பூர்

சவூதி அரேபியா

1. கிளீனிங் லேபர் — 150 பேர் தேவை
   வயது 21 - 40
   சம்பளம்: 400 SR
2. சாரதி L. V. — 5 பேர் தேவை
   வயது 22 - 35
   சம்பளம் 750 SR
3. சாரதி H V. — 3 பேர் தேவை
   வயது 22 - 40
   சம்பளம் 800 SR
4. குக் (சமையல்காரர்) — 5 பேர் தேவை
   வயது 21 - 40
   சம்பளம் 650 SR

குவைத்:

ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வயது 17க்கு மேல்
சம்பளம் 35 QD

* குவைத், பஹ்ரின், அபுதாபி, சிங்கப்பூர்
* கவுஸ்மேட் உடனடிப் பிரயாணம்

மு. கு. முற்பணம் அறவிடப்பட மாட்டாது. செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-30 முதல் மாலை 4-30 வரை நிலையம் திறந்திருக்கும்
ஏமாற்றத்தை தவிர்த்து நம்பிக்கையுடன் பிரயாணம் செய்ய இன்றே தொடர்பு கொள்ளவும்.
சுன்னாகம் கோல்டன் ரவல்ஸுடன்

* நம்பிக்கையுடன் குறித்த தவணையில் பிரயாணம் செய்ய இன்றே நாடுங்கள்.

தொடர்பு:-

## கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்

---

**V. M. K. வல்வை**
G. C. E. (O/L) விசேட பரீட்சை
ஏப்பிரல் 1988

இப்பரீட்சைக்காக யாழ் ''பொன்ட'' நிறுவனத்தால் நடத்தப்படும் முன்னோடி பரீட்சை வடமராட்சி மாணவர்களுக்காக வல்வை மாணவர் கழகத்தில் மட்டும் நடைபெறும். இப்பரீட்சையில் வடமராட்சி மாணவர்கள் அனைவரும் பங்குபற்றலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு;-
பிரதம இயக்குனர்,
V. M. A ஜெகதீஷ்,
V. M. K.
''ஒளிர்வதற்காக ஒளியேற்றுவோம்'' (1869)

---

## விற்பனை

பயணிகள் செல்லும் ''ரோயோரா சயஸ்'' மோட்டார் ரதம் (mini bus) 30ஸ்ரீ 5132 விற்பனைக்கு உண்டு. ஓடக் கூடிய நிலையில் உள்ளது. என்ஜின் திருத்தி அமைக்கப்பட்டு புது நிலையில் உள்ளது. புத்தம்புதிய பற்றறி. வாங்க விரும்புவோர் பதிவுத் தபால் மூலமோ அல்லது இக் காரியாலயத்தில் நேரில் கடிதம் கொடுத்தோ தமது விண்ணப்பத்தை 19 - 03 - 88 மாலை 4 மணிக்கு எமக்குக் கிடைக்கத் தக்கதாக விண்ணப்பிக்கவும். வாகனத்தைப் பார்க்க விரும்பின் முன் அறிவித்தலுடன் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிக்கு முன் வண்ணார் பண்ணை, ஐயனார் கோவில் வீதியிலுள்ள வண்ணை மேற்குக் கிளினிக்கில் பார்வையிடலாம்.

ஆளுநர் சபை,
வட இலங்கை மருத்துவக் கல்லூரி,
நிர்வாகக் கட்டிடம்,
164, நாலாம் குறுக்குத் தெரு,
1806 யாழ்ப்பாணம்.

---

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA JTI

## தொழிற் பயிற்சி

உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் இலகுவாக தொழில்வாய்ப்பு பெறக்கூடிய முறையில் குறைந்த காலத்தில் பயிற்சியளிக்கப்படும்.

● Computer Programming in Basic Language RadioShale, B.B C, Lase Computer களில் 60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

● Computer Programming in Cobol Language Radio snack Computer இல் 6 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம்: 1000/-
Basic Language படித்தவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

● றேடியோ, ரெலிவிஷன் றிப்பியறிங்
சகல வகை றேடியோ, ரெலிவிஷன் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

வீடியோ டெக் றிப்பியறிங்
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம் 750/-

● எலக்றிக்கல் வயறிங்
வீட்டுமின்சார வேலை, மின்சாரப் பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம்; 500-

● றிவைண்டிங்
ராண்ஸ்போமர், மின்விசிறி, மோட்டார் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்; 4 மாதம் முழுக்கட்டணம் 1000/-

● எலக்றிக்கல் வெல்டிங்
இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம்: 750/-

● DIPLOMA IN DRAUGHTSMANSHIP
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 750/-

● மோட்டார் மெக்கானிசம்
பயிற்சி முடிவில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்:
09-03-88 [கிழமை நாட்கள்]
12-03-88 (சனி, ஞாயிறு)

விபரங்களுக்கு:

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை]
யாழ்ப்பாணம்.

---

## Horizon Enterprises
## பிரயாண ஒழுங்குகள்

(Licence No. 609)

● குவைத்
Hospital Cleaners
Airport Cleaners
Bank Cleaners

* சவூதி
Mason
Carpenters
Electrician
House Drivers
H V. Drivers

● குவைத்
பணிப்பெண்கள் உடன் தேவை
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

**ம. இருதயதாஸ்**
No 96, 4ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
(சந்தைக்கருகில்) (1852)

---

## விவசாய டிப்ளோமா
(Diploma in Agriculture)

ஒருவருடகால விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி

போதிக்கப்படும் பாடங்கள்!

மிருக பரிபாலனம், பயிர்வேளாண்மை, பூங்கனியியல், பண்ணைப் பொறியியல் (ஆண்கள்) மனைப் பொருளியல் (பெண்கள்) பண்ணை முகாமைத்துவம், விவசாயத் தத்துவங்கள், ஆங்கிலம்.

தகைமை:

க. பொ. த (சாதாரணம்) அல்லது தே.க பொ.க. பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் 1-4-88ல் 17 - 24 வயதுக்கும் இடைப்பட்டிருக்க வேண்டும்.

விருப்பமுள்ள இருபாலாரும் 31-3-88ற்கு முன் கீழ் காணப்படும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கலாம்

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனாமடம்-சுன்னாகம் (1865)

---

புங்குடுதீவு-நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 4584 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப் பத்திரம் மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. விண்ணப்பப் பத்திரத்துக்கு ரூபா 5/-ம், வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்று 15-03-1988ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம்,

பொது முகாமையாளர்,
புங்-நயி.பல நோ.கூ.சங்கம்.
புங்குடுதீவு.

என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். என்பலப்பின் இடது பக்க மேல் மூலையில் ''கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

சாக்கு விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 67 | மாவு | 401 |
| 55 | மாவு | 320 |
| 100 | அரிசி | 1097 |
| 67 | '' நம்.1 | 1120 |
| 67 | '' நம்.2 | 285 |
| 50 | '' | 542 |
| சீனிச்சாக்கு | | 135 |
| சீனிப் பாய்க்கு | | 420 |
| நவதானியம் | | 37 |
| பருப்பு | | 11 |
| துண்டு | | 28 |
| கழிவு | | 188 |
| மொத்தம் | | 4584 |

பொதுமுகாமையாளர்,
புங்-நயி ப. நோ. கூ.சங்கம்.

---

★ வியாபாரம் பெருக விளம்பரம் செய்க ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மனம் ஒரு நிலைப்படும்போது ஒருவன் எல்லாச் சித்திகளையும் பெறுகிறான்.

— அன்னை சாரதாதேவி


உதயன்

உண்மை - திருந்தாமை - நடு நிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
09.03.1988 த பெ.இல:-83


## உரிய வழி செல்வதாக!

இலங்கை வாழ் தமிழ் மக்கள் கடந்த பல வருடங்களாகவே பாதுகாப்பில்லாத, அமைதியற்ற, நிச்சயமற்ற வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். தங்கள் உயிருக்கும், உடைமைகளுக்கும் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயப்பிராந்தியுடன் வாழ்கிறார்கள்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று கூறி உருவாக்கப்பட்ட இலங்கை—இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னரும் அதே நிலை தான் தொடர்கிறது!

தமிழ்ப்பகுதிகளில் இப்போதுள்ள அமைதியின்மைக்கு, இந்திய அரசு—தமிழீழ விடுதலைப் புலிகள் உறவில் ஏற்பட்ட விரிசலே காரணம் என்பதை எவரும் அறிவர்.

நண்பர்களாக இருந்த இரு சாராருக்கும் இடையில் உண்டான கசப்புணர்வு நீங்கினால், தாம் அனுபவிக்கும் கஷ்டங்கள் நீங்குவதற்கும் வழி பிறக்கும் எனத் தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

அதனால் தான், சம்பந்தப்பட்ட இரு சாராரும் பேச்சுக்களை நடத்தி, சமரசத்துக்கு வரவேண்டும் என்றும் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

பிணக்குக் கண்டவர்கள் இணக்கம் காண்பதற்கு, இரு தரப்பிலும் விட்டுக்கொடுக்கும் மனப்பக்குவம் அவசியம். ஈரோஸ் பாலகுமார் கூறுவது போல இரு தரப்பாரும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயாராக வேண்டும்.

நேற்றுவரை இருந்த நிலையில் நிபந்தனையற்ற பேச்சுக்கு விடுதலைப் புலிகள் தயாராக இருந்தனர். மட்டக்களப்பு அன்னையர்களின் கோரிக்கைக்குச் செவி சாய்த்து, அவர்கள் நிபந்தனையற்ற பேச்சுக்கு சுமார் பத்து நாட்களுக்கு முன்னர் சம்மதம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டனர்.

அதன் காரணமாக பந்து இப்போது இந்தியாவின் பக்கத்தில் தான் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து. தமிழ் மக்களின் எண்ணமும் அதுவே.

ஆயுதத்தை ஒப்படைத்தால் தான் பேச்சுவார்த்தை என்று இந்தியா விடாப்பிடியாக நிற்பது எவருக்குமே கவலை தரும் விடயமாகும்.

சமாதானத்துக்காகத் தான் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. ஒப்பந்தத்துக்காக சமாதானத்தை அடையாமல் இருக்க முடியுமா? அதனை எழுத்துக்கு எழுத்து அமுல் செய்ய வேண்டும் என்பதற்காக சமாதானத்தை அடையாமல் விட்டு விடுவதா? — இப்படி அமைச்சர் தொண்டமான் கேட்டிருப்பது குறித்து இந்தியத் தரப்பினர் ஆழ்ந்து யோசிக்க வேண்டும்.

எனினும் தமிழர் பிரச்சினையில், புலிகளுடனான உறவில் புதிய அணுகுமுறை ஒன்று குறித்து இந்திய அரசுத் தரப்பில் பரிசீலனை செய்யப்படுவதாக வெளிவந்திருக்கும் தகவல் காரிருளில் உதித்த நட்சத்திரமாகக் கொள்ளப்பட வேண்டியது. தமிழரின் நிச்சயமற்ற வாழ்க்கை நிலையை நீக்குவதற்கு இந்தியா உரிய வழி செல்லட்டும்.

பருத்தித்துறை - உடுப்பிட்டியில்

# 14 பாடசாலைகள் தரம் குறைப்பு

## 5 பாடசாலைகள் தரம் உயர்வு
### 1 ஆம் திகதியிலிருந்து அமுல்

பருத்தித்துறை, மார்ச் 9

பருத்தித்துறை கல்வி வட்டாரத்தில் ஒன்பது பாடசாலைகளும் உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் ஐந்து பாடசாலைகளும் தரம் குறைக்கப்பட்டுள்ளன.

1986 ஆம் ஆண்டு முதல் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 8 வரை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த பதினைந்து பாடசாலைகளை 1988 மார்ச் முதலாந் திகதி தொடக்கம் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை நடத்துமாறு கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

பருத்தித்துறை கிழக்குக் கஷ்டப் பிரதேசத்தில் ஏழு பாடசாலைகள் ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகளாகஇருந்து தற்போது ஆரம்ப பாடசாலைகளாகத் தரம் குறைக்கப்பட்டுள்ளன.

அவையாவன; கேவில் அ.த.க. பாடசாலை, போக்கறுப்பு அ.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி றோ.க. பாடசாலை, நாகர்கோவில் அ.மி.த.க. பாடசாலை, மாமுனை அ.த.க. பாடசாலை, குடத்தனை கரையூர் றோ.க. பாடசாலை, குடத்தனை அ.த.க. பாடசாலை.

தரம் குறைக்கப்பட்ட ஏனைய பாடசாலைகள் பருத்தித்துறை கல்வி வட்டாரத்திலுள்ள இக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம், கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை.

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் தரம் குறைக்கப்பட்ட பாடசாலைகள்: நாவலர் இ.த.க. பாடசாலை, வேதாரணீஸ்வரர் அ.த.க. பாடசாலை, கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை, கரணவாய் தாமோதர இந்து வித்தியாலயம், வல்வெட்டி விநாயகர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்திலுள்ள பதினைந்து தரம் குறைக்கப்பட்டுள்ள பாடசாலைகளிலும் கடமையாற்றும் விஞ்ஞான கணித உதவி ஆசிரியர்கள், சமூகக்கல்வி உதவி ஆசிரியர்கள், ஆங்கில உதவியாசிரியர்கள் ஆகியோர் உடனடியாக வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவர். இதன்மூலம் வடமராட்சி கோட்டக் கல்விப்பகுதியில் இருந்து வரும் ஆசிரியர்கள் தட்டுப்பாட்டை நீக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

மேலும் 1988 மார்ச் முதலாம் திகதியிலிருந்து ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகளாக பருத்தித்துறை கிழக்கு கஷ்டப் பிரதேசத்தில் பின்வரும் பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

மணற்காடு றோ.க. வித்தியாலயம், குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை, அம்பன் அ.மி.த.க. பாடசாலை, செம்பியன்பற்று றோ.க. வித்தியாலயம், கட்டைக்காடு அ.த.க. பாடசாலை.

யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம். மன்சூர் இதனை அறிவித்துள்ளார். [இ-118]

## பாடசாலையின் கவர்ச்சி
### அதன் பாடவிதானத்தில் தான் தங்கி உள்ளது என்கிறார் பணிப்பாளர்

மானிப்பாய், மார்ச் 9

பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் ஒரு பாடசாலையில் பிடிப்பும் கவர்ச்சியும் ஏற்பட வேண்டுமானால் அது அப் பாடசாலைகளைப்பிடிக்கும் பாடவிதானத்தில் தான் தங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் இப்படிக் கூறினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

பாடசாலைகள் புனரமைப்புமீளாய்வுசெய்தல் சம்பந்தமாக மானிப்பாய் வட்டாரப் பாடசாலை அதிபர்களை கல்விப்பணிப்பாளர் இந்நிகழ்ச்சியின் போது தனித்தனியாக அழைத்துக் கலந்துரையாடினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்சயன் தலைமை வகித்தார்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. சே. கந்தசாமியும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். [இ-90]

## ஜீ. சி. ஈ. சாதாரண தரம்
# தொடர் மதிப்பீட்டை
### சிறந்த முறையில் செயற்படுத்த
## அமைச்சு நடவடிக்கை

மானிப்பாய், மார்ச் 9

1986 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட ஜீ சி ஈ சாதாரணதர தொடர் மதிப்பீட்டை சிறந்த முறையில் செயல்படுத்துவதில் கல்வி அமைச்சு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

தொடர் மதிப்பீட்டை 10 ஆம் 11 ஆம் ஆண்டுகளில் இவ்வாண்டு முதலாம்தவணைக்காக நடாத்தும் பொருட்டு சைவ சமயம், தமிழ் மொழி, ஆங்கில மொழி, விஞ்ஞானம், சமூக கல்வி ஆகிய பாடங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களும் மாதிரிச சோதனைகளும் உள்ளடக்கப்பட்ட கைநூல்கள் பரீட்சை ஆணையாளர் திரு. டபிள்யூ எஸ் பெரேராவினால் ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் வகுப்பறையில் நேரடியாகப் பயன்படுத்தக் கூடிய முறையில் ஒவ்வொரு பாடத்துக்குமான கைநூல்கள் தனித்தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பாடங்கள் தவிர்ந்த தொழில் நுட்ப, அழகியல் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட நூல்களையும் விரைவில் அனுப்பி வைக்க தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் திரு பெரேரா அறிவித்துள்ளார்.

## சமய சந்நிதிகளில்

### கும்பநாயகி வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

காரைநகர்–பணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 15 ஆம் திகதி பெரியசப்பற உற்சவமும், 16 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும். 17 ஆம் திகதி வியாழனன்று நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் இந்த வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும். (இ-7)

## செய்திக்கொத்து

### சேவாச்சிரமம் வீடமைப்புத்திட்டம்

பருத்தித்துறை, மார்ச் 9

பருத்தித்துறையில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோருக்கான வீடமைப்புத்திட்டத்தை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக 1985 ஆம் ஆண்டு இராணுவத்தின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான திரு எஸ். மகாலிங்கம் என்பவரின் மனைவியான திருமதி மகாலிங்கம் அம்மன்கிளி என்பவருக்கு இருபத்தைந்தாயிரம் ரூபா பெறுமதியான வீடைக் கட்டிக் கொடுக்கவுள்ளது. (இ-118)

### கோட்டக் கல்வி அதிகாரி

பருத்தித்துறை, மார்ச் 9

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ஏ. வி. சங்கரப்பிள்ளை இம்மாதம் முதலாம் திகதி முதல் வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்தின் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-118)

### கரம்பன் குருமடம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

கரம்பன் குருமடஸ்தாபகர் திரு அந்தோனிப்பிள்ளை அவர்களின் நினைவு தினம் இம்மாதம் 18ஆம் திகதி ஆகும்.

### மதிப்பீட்டுப்பணி

கிளிநொச்சி, மார்ச் 9

1982 ஆம் ஆண்டின் பின் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்கள்தொடர்பான மதிப்பீட்டுப் பணியை விவசாயத் திணைக்களம்மேற்கொண்டுள்ளது. (இ-76)

### பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க புனரமைப்பு சம்பந்தமான பொதுக்கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (இ-76)

### விழா முற்பணம் வங்கிக்கடன்

பருத்தித்துறை, மார்ச் 9

வடமராட்சிகோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பங்குனி மாதச் சம்பளத்துடன் விழா முற்பணமும், விசேட வங்கிக் கடனாக ரூபா ஆயிரம் மேலதிகமாகக் கிடைக்கவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை உடனடியாக தத்தம் பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்குமாறு வடமராட்சி கோட்டக்கல்வி அதிகாரி செல்வி இ. பெரியதம்பி அறிவித்துள்ளார். (இ-118)

ஷார்ஜா கிண்ண கிரிக்கெட்

## ரவி சாஸ்திரி தலைவர்; ஸ்ரீகாந் உபதலைவர்
### மனிந்தர்சிங் அணியில் இல்லை

புதுடில்லி மார்ச் 8

ஷார்ஜா கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் இந்திய அணி வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அணியின் தலைவர் ரவி சாஸ்திரி உபதலைவர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்.

இவர்களுடன் மேலும் 12 வீரர்களின் பெயர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்திய அணியின் பிரபல சுழல்பந்து வீச்சாளர் மனிந்தர் சிங் இந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அணியின் ஏனைய வீரர்கள்:- நவ்ஜோத் சிங் சித்து டபிள்யூ வி ராமன், முகம்மது அசாருதீன், மொகிந்தர் அமர்நாத், கபில்தேவ் அஸ்ரப் லூ, கிரேன் மூரே, சேட்டன்சர்மா, சஞ்சீவ் சர்மா, அயோய் சர்மா, சந்திரகாந் பண்டிட், நரேந்திர கிர்வணி.

எதிர் வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் ஷார்ஜா கிண்ணப் போட்டியில் இந்தியா, இலங்கை, நியூசிலந்து ஆகிய நாடுகளின் அணிகள் பங்குகொள்கின்றன.

இந்திய அணியில் இருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திலிப் வெங்சக்கார் இந்த அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### பொய்யாமொழி



குறள்:

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்

பொருள்:

யானை பருத்த உடம்பை உடையது; கூர்மையான கொம்புகளை உடையது; ஆயினும் ஊக்கமுள்ளதாகிய புலி தாக்கினால் அதற்கு அஞ்சும்.

யாழ்ப்பாணத்தில்

## மத்திய புனர்வாழ்வு தகவல் நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 9

யாழ் நகரில் உள்ள அரச சார்பற்ற பொது நிறுவனங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து "மத்திய புனர்வாழ்வு-தகவல் நிலையம்" ஒன்றை நிறுவ உள்ளன.

இம்முடிவு கடந்த வெள்ளிக்கிழமை "கியூடெக்" நிறுவனத்தில் நடந்த பொது ஸ்தாபனங்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கெயர், ரெட்பானா, புனர்வாழ்வுக் கழகம், புனர்வாழ்வு நிதியம், இந்துக் கலவிச் சபை, கியூடெக், சிறுவர் பாதுகாப்பு நிதியம் உட்பட 10 ஸ்தாபனங்கள் கலந்துகொண்டன. (ஒ-9)

## சேவை நலம் பாராட்டு

யாழ்ப்பாணம் மார்ச் 9

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. வ. மகாதேவனுக்கு இவ்வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சேவை நலம் பாராட்டு விழாவை அண்மையில் நடத்தியது.

விழாவுக்கு மேற்படி வித்தியாலயத்தின் உப-அதிபர் திருமதி த. ஞானப்பிரகாசம் தலைமை வகித்தார்.

ஓய்வுபெற்ற அதிபரின் புகைப்படத்தை யாழ் பதில் திட்டமிடல் பணிப்பாளர் திரு சு. சிவதாசன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

திரு. வ. மகாதேவன் 36 ஆண்டுகளாகக் கல்விச் சேவை புரிந்துள்ளாரெனவும் இவ்வித்தியாலயத்தில் 9 ஆண்டுகளாக அதிபராகக் கடமை ஆற்றி கண்ணியம், கடமை, கட்டுப்பாட்டைப் பேணி இவ்வித்தியாலயத்தின் மரபு வழியையும் பாரம்பரியத்தையும் பேணியுள்ளாரெனவும் அவர் கூறினார். (இ)

பஞ்சாப் மாநிலத்தில்

# ஜனாதிபதி ஆட்சியை நீடிக்க அரசமைப்புச் சட்டத் திருத்தம்

## இந்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 8

இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும்.

பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை காலவரையின்றி நீடிக்கச் செய்யும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்துக்கு புதிய திருத்தம் கொண்டு வரப்படும் என்று புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இணை அமைச்சர் ப. சிதம்பரம் இத்தகவலை வெளியிட்டார்.

இடை நிறுத்தம் செய்யப்பட்ட பஞ்சாப் மாநில சட்டசபை கடந்த வாரம் ஜனாதிபதியினால் கலைக்கப்பட்டது.

பஞ்சாப் மாநில கவர்னர் சித்தார்த்தா சங்கர் ரேயின் சிபார்சின் மீது தான் சட்டசபை கலைக்கப்பட்டது என்றும் இணை அமைச்சர் சிதம்பரம் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். (எ)

## வெளி உலகில்

### இஸ்ரவேலியருடன் பஸ் கடத்தப்பட்டது

டெல்அவிவ், மார்ச் 8

இஸ்ரவேலின் தெற்குப் பகுதியில் இஸ்ரவேலியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றை பலஸ்தீனிய கெரில்லாக்கள் கடத்திச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

இஸ்ரவேலியப் பொலீஸார் பஸ்ஸை மீண்டும் கைப்பற்றுவதற்காக நடத்திய சண்டையில் மூன்று கெரில்லாக்கள் உயிரிழந்தனர். கெரில்லாக்கள் சுட்டதில் மூன்று பயணிகள் மாண்டனர். (எ)

### ஜெனரல்வால்டர்ஸ் எதிர்ப்பு

ஐ. நாவில் உள்ள பலஸ்தீன விடுதலை இயக்க அலுவலகத்தை மூடிவிடுவது என்ற அமெரிக்காவின் முடிவை ஐ. நாவின் அமெரிக்கப் பிரதிநிதி ஜெனரல் வெர்னன் வால்டர்ஸ் எதிர்த்துள்ளார்.

மொரக்கோ செய்தி வட்டாரம் இத்தகவலை வெளியிட்டது. (எ)

### பத்திரிகைகள் பணிபற்றி பிரதமர் ராஜீவ் காந்தி

பத்திரிகைச் சுதந்திரம் தவறாகப் பயன்படுத்தக் கூடாது.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி சொன்னார்.

இந்திய செய்திப் பத்திரிகையாளர் சங்கப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் காந்தி கடந்த திங்கள் மாலை கலந்து கொண்டு பேசினார்.

திரு. காந்தி மேலும் சொன்னதாவது:

பத்திரிகைகள்பொறுப்புணர்ச்சியுடன் பணிபுரிய வேண்டும். விருப்பு வெறுப்பற்ற முறையில் பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரிக்கவேண்டும். தேசத்தைக் கட்டி எழுப்புவதில் அரசுடன பத்திரிகைகளும் பங்காளியாக மாறவேண்டும்.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (எ)

## அமைதிப்படையினர் எவ்வளவு காலம் இலங்கையில் இருப்பர்?

புதுடில்லி மார்ச் 8

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தி சகஜ நிலையைக் கொண்டு வருவதில்தான் இந்திய அமைதிப்படை ஈடுபட்டுள்ளது.

இந்தக் கண்ணோட்டத்தில்தான் அமைதிப்படை எவ்வளவு காலத்துக்கு இலங்கையில் தங்கியிருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும்.

இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர் சிங், ராஜ்ய சபாவில் எழுத்து மூலம் அளித்த பதிலில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. நட்வர்சிங் மேலும் தெரிவித்ததாவது:

ஆயுதங்களை ஒப்படைத்து, ஒப்பந்தத்தை ஆதரித்தால் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையேயான வேறுபாடு நீங்கிவிடும்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பிடிவாதமாக இருக்கிறார்.

அமைதிப் படையினர் தாக்குதலுக்கு முன் இருந்த இடத்துக்குச் செல்ல வேண்டும்; புலிகளுக்கு பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்கக் கூடியதான இடைக்கால நிர்வாகம் வேண்டும்— இப்படி முன் நிபந்தனைகளை திரு. பிரபாகரன் விதித்திருக்கின்றார்.

— இப்படி திரு நட்வர்சிங் ராஜ்ய சபாவில் தெரிவித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகட்டிவ் Processing செய்தல் இலவசம்
★ விற்பனை நிழற்படச்சுருள்கள்

KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE

பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

09 - 03 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு

NEW KONICA S R V 100

நிழற்படச் சுருள்கள் இலவசம்

மேலதிக விபரங்களுக்கு:-

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## காசன் ஸ்தாபனம்
## திறப்பு விழா

காலம்: 09-03-1988 புதன்கிழமை
பிற்பகல் 4 30 மணி

பாடசாலைகள், காரியாலயங்களுக்குத் தேவைப்படும்
★ அடையாள அட்டைகள்,
★ பெறுமதி மிக்க ஆவணங்கள்
காலங்காலமாகப் பேணிப் பாதுகாக்கப்படவேண்டிய
★ கல்விச் சான்றிதழ்கள் மற்றும் விளையாட்டு, பணவைப்புச் சான்றிதழ்கள்
★ படங்கள் போன்றவற்றை பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் உறை இணைப்புச் செய்துகொள்ள ('லமி பக்கர்')
உங்களது அலுமினியம், பித்தளை, எவர்சில்வர் பொருட்களுக்கு
★ பெயர் பொறித்துக்கொள்ள
தோல், பிளாஸ்டிக், பேனா, பென்சில் என்பவற்றில் ★ அச்சிட்டுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

**காசன்**

21-6ஆம் குறுக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எமது
புதிய வெளியீடுகள்!

1. பிரபு — கார்த்திக் — ரஞ்சனி
**"உரிமைக் கீதம்"**

2. **"ஏக்நாத் 7-"**
வீடியோ பத்திரிகை

## குணம்
## வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

## விற்பனை

**ஹொண்டா MD-50**

இறக்குமதி செய்யப்பட்ட
மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு :
17, ரெம்பிள் றோட்,
சஞ்சுவான் கோவிலடி,
யாழ்ப்பாணம். (1633)

## நீத்தார் பட்டியல்

### சின்னத்தம்பி விஜயானந்தன்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளரும், அரசியற் குழு உறுப்பினரும், தொழிற்சங்க பிரமுகரும் ஆகிய திரு விஜயானந்தன் 08-03-88 காலை அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற திரு. முருகேசு சின்னத்தம்பி, திருமதி இலட்சுமி சின்னத்தம்பி ஆகியோரின் அன்புப் புதல்வரும், திரு மா. சுப்பிரமணியம் [நொத்தாரிசு, விகிதர், கந்தரோடை] காலஞ்சென்ற திருமதி நாகம்மா சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், செல்விகள்: ரஜனி, ராஜினி, செல்வன் திவாகர் [ஸ்கந்தவரோதயாக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பத்மாவதி, திரு. M S. நடராஜா [Retd. Telecommunication Officer], திருமதி மங்கையற்கரசி, திரு செல்வானந்தன் [Retd. Govt Officer] திரு. ஈஸ்வரானந்தன் [Retd. Prison Supervisor] ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. நாகமுத்து முருகேசு, திருமதி பரமேஸ்வரி நடராஜா, திரு செல்லையா பாலசிங்கம் [உதயன்], திருமதி செல்லம்மா செல்வானந்தன் [ஆசிரியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி], திருமதி சிவபாக்கியம் ஈஸ்வரானந்தன், திருமதி புவனேஸ்வரி பரராஜசிங்கம் [Retd. Officer C G.R.], திரு. வரதராஜா [France] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று 09 - 03 – 88 புதன்கிழமை பி. ப. 2 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்;
செ. பாலசிங்கம்
கந்தரோடை.

2-16 256 3/8

### சு. சிவநேசன்

சொக்கவில் கிழக்கைச் சேர்ந்த சு சிவநேசன் 8-3-88 இல் காலமானார் இவர் A. K. S. நகை மாளிகை முகாமையாளரும், மாத்தளை கந்தசுவாமி ஆலய முகாமையாளரும், நகைக்கடை உரிமையாளர்கள் சங்கத் தலைவருமாவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
(2013) விங்கம் சில்க் ஹவுஸ்

### செல்வி லலிதாமதி குணசிங்கம்

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த செல்வி லலிதாமதி குணசிங்கம் (ஆசிரியை) 8-3-88 இல் காலமானார். அன்னார் முத்துக்குமாரு குணசிங்கம், குணசிங்கம் சிந்தாமணி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகளும் திருமதி நா. மங்கையற்கரசி, திருமதி ச. இந்துமதி, செல்வன் கு. தேவராசன், செல்வன் கு. இளங்குகராசன் ஆகியோரின் அன்புச்சகோதரியும்; திரு இ. நாகேஸ்வரன், திரு மு சண்முகசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்; தவராஜி, செந்தூர் ராஜி ஆகியோரின் அன்பு அன்ரியுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன் கிழமை மாலை நெடுந்தீவு மேற்கில் நடைபெறும்.

தகவல்: குடும்பத்தினர்.

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு. (2011)

### திரு. வேலுப்பிள்ளை நாகரட்ணம்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த (ஓய்வு பெற்ற ஆசிரியர் யூனியன் கல்லூரி) திரு வேலுப்பிள்ளை நாகரட்ணம் 7- 03- 88 அன்று காலமாகி விட்டார். அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், இரத்தினஜெயா (பொறியியலாளர் U.K), இரத்தினதயா (பொறியியலாளர் கொழும்பு), இரத்தின தேவகி (ஆசிரியை மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), இரத்தினஜீவகி (U K), இரத்தினகிருபா, இரத்தினரூபகி, இரத்தின சிறீவதி (கச்சேரி மன்னார்) ஆகியோரின் அருமைத் தகப்பனும், சாந்தா (U.K), வசந்தி, ரெரன்ஸ் பிலிப்புப்பிள்ளை (இணைப் பதிகாரி மாவட்ட அமைச்சு மன்னார்), அமிர்தநாயகி (U K), ஜெயராஸ் அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெனிபர் (U.K), நோட்டன் (U K), யோசப்பின் (U K), சருன், இவோன், நிரோஷன், டில்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். இறுதிக்கிரியைகள் 9-3-88 பி ப. 3 00 மணிக்கு ஏழாலை வடக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஏழாலை வடக்கு தென் இந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மனைவி, பிள்ளைகள்.

ஏழாலை வடக்கு.
ஏழாலை, (1878)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஈசன் அருளிய
திருமலர்
12 06 1948

அரக்கர் அழித்த
உதிர் மலர்
21 03 1987

திதி: 09 03 1988
புதன்கிழமை

**அமரர்**
**பெருமாள் நாயுடு சுப்பையா**
**அவர்கள்**

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் அனைவரையும் ஆருத்துயரத்தில் ஆழ்த்தி இறைபதமடைந்தீர்கள். உங்கள் நினைவுச் சுடர் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். தங்கள் ஆத்மா சாந்தியுடன் இறையடியில் இருக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் நினைவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், அம்மா, மாமா, மாமி, மைத்துனர்கள், சகோதரர்கள், சகலன், மச்சாள், நண்பர்கள்.

இல 4. மாவடி வீதி,
யாழ்ப்பாணம், [1867]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25-06-1908

மறைவு
09-03 1987

அமரர்
**இரகுநாதர் துரையப்பா**
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

ஆண்டொன்று சென்றாலும் ஐயா எம் உள்ளத்தில் நீங்கா நிலைபெற்று நிற்கின்றீர்கள்! அணையாத சுடராக அன்பொளி பரப்பி அழியாத விளக்காக அறிவொளிதந்து, இணையாத ஒளியாக சேவைதனைச் செய்து கனிவாய்ப் பேசிய களங்கமில்லா முகத்தை நாம் காண்பது இனி எந்நாளோ! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புமனைவி
குடும்பத்தினர்

புங்குடுதீவு-3
[2008]

## தகவல் தாருங்கள்



**மரியாம்பிள்ளை ஒல்குவிச் அன்ரன்**

எனது மகன் மரியாம்பிள்ளை ஒல்குவிச் அன்ரன் அவர்களை 22/10/1987 இல் இருந்து இன்று வரை காணவில்லை.

இவர் 1963ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ஆம் நாள் பிறந்தவர். காணமல் போன அன்று நீலச் சாரமும் நீலச் சேட்டும் அணிந்திருந்தார். இவர் இருப்பதாக அறிந்தவர்கள், இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தகவல் தருமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மரியாம்பிள்ளை மெற்றில்

3/2, 1ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர்
யாழ்ப்பாணம். (1872)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



**திருமதி சிவஞானவல்லி**
**சிவபாதசுந்தரம்**

தோற்றம்:- 24 04-1921
மறைவு:- 08-02-1988

அன்பின் திருவுருவமாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய் பார்வையில் பசுமரமாய், சிரிப்பில் நிறைமதியாய், குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்போடும் ஆதரவோடும் எம்மை வளர்த்து இடைநடுவில் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே! தங்கள் திருவுருவும் நினைவும் எப்பொழுதும் எம் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டன. தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

—குடும்பத்தினர்

தியேட்டர் லேன்,
இணுவில். (1873)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மாணிக்கம் ஜெயசிங்கம்**

தோற்றம் 26 - 03 - 1966
மறைவு 07 - 03 - 1987

நேசமுடன் ஜெயா!

நீ - எம்மை எல்லாம் துயர்க்கடலில் ஆழ்த்திவிட்டுச் சென்று - 1 வருடம் நிறைவாயிற்று - ஆனாலும் உன் மிடுக்கான துடிப்பும், ஆரம்ப முதலே அறிவு சூழ் சமூகத்தைப் படைக்க வேண்டுமென்பதற்காக அயராது உழைத்தாய்! அது மட்டுமா, அடிமைத்தளையை உடைக்க வேண்டுமென்பதற்காகவும் ஓங்கி ஒலிக்க உன் குரல் என்றும் எம் செவிகளில் எதிரொலித்து - அவை நம் இதயத்தில் எக் கணமும் பசுமையான நினைவுகளாக இருக்கின்றன. [1870]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

★  ★

**கணபதிப்பிள்ளை**
**பாலச்சந்திரன், B.Sc. (Hons)**
(முன்னைநாள் நிர்வாக இயக்குனர் சீநோர்)

வானொலி கேட்டபோது வந்தது உனது செய்தி; காலன் உன்உயிர் கவர்ந்த கதையது கூறிக் கொண்டு, வேகுதே நெஞ்சமெல்லாம் வெந்தணல் நெருப்பாய் நின்று பாரிலே மறப்பாருண்டோ பாலச்சந்திரனே உன்னை

உருவத்தில் சிறியவன் நீ உள்ளத்தால் பெரியவன் நீ கரைகாண முடியாத குணநலம் பெற்றவன் நீ விரைவிலே எம்மை விட்டுப் பிரிந்திட்ட நியாயமென்ன? தவியாகத் தவிக்கின்றோம்

தாயில்லாச் சேயர்போல்

கட்டிய மனைவிஅழ கன்னிகை மகளும் அழ உற்ற உன் சுற்றம் அழ ஊர்மக்கள் தானும் அழ கற்றவர் உம்மிடத்தில் கசறியே அழுது நிற்க வற்றாத கண்ணீருடன் வழி அனுப்பி வைக்கின்றோமே.

ஆயிரம் ஆயிரமாம் ஊழியர் நேரில் நின்று காரியம் பார்த்த உந்தன் காலமும் இதுவோ ஐயா! பாயிரம் பாடல்பாடி உம் திரு உருவப் படத்தை ஞாபகப் படுத்துகின்றோம் சீநோரின் ஊழியர் நாம். (1796)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 09 03-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road Jaffna on Wednesday, 9th March 1988.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org